# சபையின் வருகை

திகைப்பூட்டும் புதிய விஷயமொன்று நடபடிகளில் தோன்றியது, இது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய கிருபையின் உச்ச கட்டத்தை அவருடைய மேசியாவில் காண்பித்தது. இது எல்லாக் காலங்களுக்குமான வாக்குத்தத்தங்களை நிறைவேற்றி, தேவனுடனான மனித குல உறவின் நிறைவான செயலாய் நிலைத்திருக்கின்றது. எல்லாம் வல்ல தேவனுடனான உறவில் மனிதனுக்கு இதற்கு முன் இவ்விதமான ஆசீர்வாதம், ஈவு அல்லது உறவு முறையானது ஒருபொழுதும் கொடுக்கப் பட்டிருந்ததில்லை.

சபை என்பதே இந்தப் புதிய ஆசீர்வாதமாய் இருந்தது. புதிய ஏற்பாட்டில் "... என் சபையைக் கட்டுவேன்" (மத். 16:18) என்று இயேசு வாக்குத்தத்தம் செய்த இடத்தின் சந்தர்ப்பப் பொருளில்தான் "சபை" என்ற வார்த்தை உண்மையிலேயே முதலில் தோற்றம் பெறுகின்றது. நடபடிகளில் இவ்வார்த்தை, அப். 5:11ல் "சபையாரெல்லாருக்கும், ... பயமுண்டாயிற்று" என்று கூறும் இடத்தில் முதன்முதலாகப் பயன்படுத்தப் படுகின்றது. KJVயில் (மற்றும் தமிழிலும்) "church" அல்லது "சபை" என்ற வார்த்தை இதற்கு முன்பாக உள்ள அப். 2:47ல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், மூல கிரேக்க வசனங்களில் இவ்வசனத்தில் இவ்வார்த்தை இல்லை. KJV (மற்றும் தமிழிலும்) "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்"[1] என்றுள்ளது. பின்னாளில் உண்டான மிகச் சரியான மொழிபெயர்ப்புக்களில் "added them together" (ASV), "adding to their number" (NASB), மற்றும் "added to their number" (NIV) என்றுள்ளது.

"சபை" மற்றும் "சபைகள்" என்ற வார்த்தை புதிய ஏற்பாடு முழுவதிலும் 114 முறைகளும், வெளிப்படுத்தின விசேஷத்தில் மட்டும் 20 முறைகளும் உள்ளன. வேதாகம மாணவர்களின் எண்ணத்தில் இவ்வார்த்தை முக்கியமானதொரு இடத்தைப் பிடிக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தினால் கிறிஸ்தவர்களின் மனதிற்குக் கொண்டு வரப்பட்ட இவ்வார்த்

*தையானது கி.பி. 33ல் இவ்வுலகத்திற்குப் புதிய வார்த்தையாகத் தோன்றியது; அந்த மக்கள் கூட்டமான அவருடைய சரீரத்திற் குக் கர்த்தரால் இரட்சிப்பும், நித்தியத்தில் வெகுமதியும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது (எபே. 1:22, 23; 5:23).*

*நடபடிகளின் வரலாறு மலருகையில் பல இடங்களில் சபைகள் காணப்படுகின்றன (அப். 9:31; 11:26; 14:23; 20:17). சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, அதைக் கேட்டவர்கள் விசுவாசித்துக் கீழ்ப்படிந்த இடங்கள் எல்லாவற்றிலும் ஆராதனை செய்பவர்களின் குழுவானது ''சபை'' என்று அறியப்பட்டது. இந்த நிறைவேற்றங்களின் வரலாற்றை நடபடிகள் விரித்துரைக்கின்றது.*

## சிறப்பான சில விஷயங்கள்

*''சபை'' என்பதற்கான கிரேக்க வார்த்தையான ekklesia என்பது, "வெளியே" என்று அர்த்தமுடைய* ek *என்ற வார்த்தை யையும், "அழைக்கப்பட" என்று அர்த்தமுடைய kalein என்ற வார்த்தையையும் சேர்த்துப் பெறப்பட்டதாய் உள்ளது. எனவே, ekklesia என்றால் "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தமாகிறது. இது மத ரீதியான, சமுதாய ரீதியான அல்லது அரசியல் வட்டாரங்களிலும் கூட இருக்கக் கூடிய வித்தியாசப்பட்ட பல குழுக்களுக்குப் பயன்படுத்தக் கூடிய வார்த்தையாகும். இவ்விளக்கமானது முதல் நூற்றாண்டில் மதரீதியாகவோ அல்லது மற்ற ரீதியாகவோ குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சிறப்பாக நியமிக்கப்பட்ட எந்த ஒரு குழுவையும் குறிப்பிட்டது. கிரேக்க மொழியில் இருந்த இந்த சாதாரண வார்த்தையை இயேசு எடுத்துக் கொண்டு, எஞ்சிய காலத்திற்கு அவ்வார்த்தைக்கு மத ரீதியான ஒரு சிறப்பு அர்த்தம் கொடுத்தார்.*[2]

*துவக்கத்தில், ekklesia என்ற வார்த்தையானது உலகப் பிரகாரமான அர்த்தம் மட்டுமே கொண்டிருந்தது. இதன் பொதுவான பயன்பாடொன்று கிராம அல்லது நகர சங்கங் களைக் குறித்தது. தலைவர்கள்/முன்னோடிகள் என்பவர்கள் தங்கள் சமுதாயங்களின் பொது விஷயங்களில் மக்களை வழி நடத்திச் செல்லும்படியாக ''வெளியே அழைக்கப்பட்ட'' மனிதர்களாய் இருந்தார்கள்.*

*Ekklesia* என்ற வார்த்தையின் உலகப் பிரகாரமான இரண்டாவது பயன்பாடென்பது மக்கள் கூட்டம் ஒன்றை - ஏதொரு வகையான கூட்டத்தையும் - குறிப்பதாய் இருந்தது. எந்த ஒரு நோக்கத்திற்காகவும் கூட்டம் கூடும் பொழுது அந்தக் குழு அல்லது அமைப்பைக் குறிப்பிட *ekklesia* என்ற வார்த்தையானது பயன்படுத்தப்பட முடிந்தது. எபேசுவில் தெமேத்திரியு என்பவன் பவுலுக்கெதிராகப் பழிப்புரை கூறிய போது எழுந்த கலகத்திற்குக் கூடிய கூட்டத்தைக் குறிக்க இப்பயன்பாடு மூன்று முறை காணப்படுகின்றது (அப். 19:30, 32, 41). பட்டணத்துச் சம்பிரதியானவன் ''கூட்டத்தை'' அல்லது *ekklesia*வை அனுப்பி விட்டான் - இவ்வார்த்தையானது இவ்விடத்தில் அந்த நிகழ்ச்சியின் போது கூடிய குறிப்பிட்ட கூட்டத்தை மட்டுமே குறித்தது.

*Ekklesia*வின் ஆவிக்குரிய பயன்பாடுகள் பல உள்ளன. (1) இயேசு தாம் கட்டப் போவதாக வாக்குத்தத்தம் செய்ததை இவ்வார்த்தை குறிப்பிடுகின்றது (மத். 16:18), இது அவரது ஆவிக்குரிய சரீரம் எனப்படுகின்றது (எபே. 1:22, 23), இது அவர் தம் இரத்தத்தினால் கிரயம் கொள்வதற்காக இதற்காக (சபைக்காக) மரித்தார் (அப். 20:28) மற்றும் இது உருவக நடையில் அவரது மணவாட்டி/மனைவி என்று அறியப் படுகின்றது (எபே. 5:22-33). இம்முறையில் பயன்படுத்தப்படும் பொழுது இவ்வார்த்தையானது ''உலகளாவிய சபை''யை குறிக்கின்றது - ஆவிக்குரிய இச்சரீரத்தில் எல்லா நூற்றாண்டுகளிலும் சேர்க்கப்படும், சிறப்பான உறவு முறைபெறும் "கிறிஸ்தவ" எல்லா மக்களையும் குறிக்கின்றது (அப். 11:26). இது கர்த்தருக்குரிய மக்களால் ஆன ஆவிக்குரிய சரீரமான "ஒரே சரீரம்'' ஆகும், இதைப் பற்றித்தான் பவுல் கிறிஸ்துவுக்குரிய சபை ஒன்றுதான் உள்ளதென்ற சத்தியத்தை எழுதும் பொழுது கூறினார் (எபே. 4:4). ஆபிரகாம், மோசே, தாவீது, தானியேல் மற்றும் பழைய ஏற்பாட்டு மற்றைய விசுவாசமுள்ள மனிதர்கள் யாவரும் சபை நிலைநாட்டப்படுவதற்கு முன்பு வாழ்ந்தார்கள்; அவர்கள் ஒரு பொழுதும் கர்த்தருடைய சபையின் உறுப்பினர்களாய் இருந்ததில்லை. அவர்கள் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டிருந்தாலும், அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று குறிப்பிடுவது சரியானதல்ல.

(2) *Ekklesia* என்ற வார்த்தையானது உள்ளூர்ப் பகுதி

*யொன்றில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததால் தொடங்கப் பெற்ற உள்ளூர் குழுவாகிய ஒரு பிராந்திய சபையாரையும் குறிக்கின்றது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு மக்கள் பதில் செயல் செய்த இடங்கள் எல்லாவற்றிலும் ஒரு சபையானது நிலைநாட்டப் பட்டது. இவ்வார்த்தையின் பயன்பாடானது புதிய ஏற்பாட்டில் பொதுவானதாகும்.*

*இவைகள் இன்றைய நாட்களில் மதக்குழுக்கள் பலவற்றால் "சபை" என்ற பெயர் பயன்படுத்தப்படுவது போல, வித்தியாசப் பட்ட நாமகரணக் கூட்டங்களாய் இருக்கவில்லை. மாறாக, இவைகள் உலகளாவிய சபையின் பிராந்திய சபைகளாக, புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட ஒரே ஒரு சபையாக இருக் கின்றன. இன்றைய நாட்களில் உள்ள நாமகரணக் கூட்ட மெதுவும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த பல ஆண்டுகளுக்குப் பின்பு இன்றைய நாளின் நாமகரணக் கூட்டங்கள் யாவும் தோன்றியதால் இந்நாமகரணக் கூட்டத்தின் உறுப்பினர்கள் தங்களைப் புதிய ஏற்பாட்டில் அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது. எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தையும் இயேசு தொடங்கவில்லை; அவை எல்லாம் மனிதர்களால் தொடங்கப்பட்டன. எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தையும் கிரயம் கொள்வதற்காக இயேசு மரிக்கவில்லை; கர்த்தர் தமது சபையைக் கிரயம் கொள்வதற் காகவே மரித்தார். எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தையும் இரட்சிப்பதாக இயேசு வாக்குத்தத்தம் செய்யவில்லை; அவர் தம்முடைய சொந்த ஆவிக்குரிய சரீரத்தின் இரட்சகராயிருப் பதாகவே வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார் (எபே. 5:23). நாமகரணக் கூட்டங்கள் ஆவிக்குரிய அந்த சரீரமாகத் தகுதி பெறுவதில்லை; அவைகள் வேதாகமத்திலேயே இல்லை.*

*(3) எந்த ஒரு பிராந்திய சபையிலும் கூடிவரும் தேவனு டைய பரிசுத்தவான்களின் குறிப்பானதொரு கூட்டம் எதையும் விவரிப்பதற்கு ekklesia என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது (அப். 14:27; 1 கொரி. 11:18; 14:23, 28, 33). கொரிந்துவில் இருந்த சபையின் உள்ளூர்க் கூடுகைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட சில தவறான பயன்பாடுகளைப் பவுல் திருத்தினார். குறிப்பாக அதிகாரம் 14ல் பவுல், அவர்கள் தங்கள் பொதுவான கூடுகைகளின் போது அற்புத வரங்களைத் தவறாகப் பயன்படுத்தியதைக்*

*திருத் தினார். கொரிந்துவில் இருந்த பரிசுத்தவான்கள் கர்த்தரை ஆராதிக்கக் கூடிய கூட்டத்தை அர்த்தப்படுத்த அவர் ekklesia என்ற வார்த்தையைப் பலமுறை பயன்படுத்தினார். அவர்கள் ஒன்றுகூடி, தங்களின் ஆராதனையை நடத்தி, பிறகு தங்களின் தனித்தனி வீடுகளுக்குக் கலைந்து சென்று விடுவார்கள். இவ்வகையில் அவர்கள் ஒன்றுகூடும்பொழுது அந்தக் குறிப் பிட்ட சந்தர்ப்பத்தில் மட்டும் அவர்களை* "church" *"சபை" அல்லது "ekklesia" என்று அழைப்பது பொதுவானதாயிருந்தது.*

*இவை யாவும் "சபை"*[3] *என்ற வார்த்தையின் பொதுவான பயன்பாடுகள் ஆகும். மற்றும் இந்த வார்த்தையின் அர்த்தத்தை மிகச் சரியாய்க் கண்டு கொள்வதற்கு இவ்வார்த்தை காணப் படக்கூடிய புதிய ஏற்பாட்டு வசனப்பகுதி எதையும் அதன் சந்தர்ப்பப் பொருளை அறிந்து கவனத்துடன் பயன்படுத்து வதில் மாணவர்கள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். வார்த்தைகள் பல்வேறு அர்த்தங்களின் நிழல் கொண்டிருக்கும் பொழுது, அதன் சந்தர்ப்பப் பொருளின் பயன்பாடறிந்து கற்க வேண்டும், வேகமான வாசிப்பு சிபாரிசு செய்யப்படுவதில்லை.*

## உலகளாவிய சில விஷயங்கள்

*முதல் பிராந்திய கர்த்தருடைய சபையானது எருசலேமில் இருந்தது (அப். 2:41, 47; 8:1), இந்தக் குழுவைப் போலவே விரைவில் சீரியாவின் அந்தியோகியாவில் ஒரு குழு ஏற்படுத்தப் பட்டது (அப். 11:25, 26). அடுத்ததாக, மிகச் சரியாகக் கர்த்தர் திட்டமிட்ட வகையிலேயே (அப். 1:8) யூதேயா முழுவதிலும், கலிலேயாவிலும், சமாரியாவிலும் (9:31) பிராந்திய சபைகள் நிலைநாட்டப்பட்டன. பவுலின் முதலாம் நற்செய்தி ஊழியப் பயணத்தில் பிசீதியாவின் அந்தியோகியாவிலும், இக்கோனி யம், லீஸ்த்திரா மற்றும் தெர்பை ஆகிய ஊர்களிலும் பிராந்திய சபைகள் நிலைநாட்டப்பட்டன (அப். 14:20-23). இரண்டாம் ஊழியப் பயணத் தொடக்கத்தில், சீரியா மற்றும் சிலிசியாவின் பகுதிகளில் சபைகள் இருந்தன (அப். 15:41).*

*விரைவிலேயே கொரிந்து (அப். 18:8; 1 கொரி. 1:1, 2), எபேசு (அப். 20:17, 28; வெளி. 2:1), தெசலோனிக்கே (1 தெச. 1:1), ரோமாபுரி (ரோமர் 16:5), பிலிப்பி (பிலி. 4:15) மற்றும் ஆசியாவில் இருந்த ஆறு நகரங்களான சிமிர்னா, பெர்கமு,*

*தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா (வெளி. 2, 3ஐக் காணவும்) ஆகிய இடங்களில் சபைகள் அடையாளப்படுத்தப்பட்டன. கலாத்தியா நாட்டில் பல இடங்களில் சபைகள் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது (1 கொரி. 16:1). தமஸ்குவில் பவுல் சீஷர்களுடன் கூடியிருந்த தால், அங்கு ஒரு உள்ளூர் சபையிருந்ததென்று ஒருவரால் உய்த்துணர முடியும் (அப். 9:10, 19ஆ, 25).*

## இயல்பான சில விஷயங்கள்

*பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் எருசலேமில் முழுமையான சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 2). பிலிப்பு சமாரியாவில் வசனத்தை அறிவித்தார் (அப். 8:5) மற்றும் சிதறிச் சென்ற சீஷர்கள் சீரியாவின் அந்தியோகியா வரையிலும் கூட வசனத்தைப் பரவச் செய்வதில் உத்வேகத் துடன் இருந்தார்கள் (அப். 11:19-21). பவுல் தமது முதலாம் பயணத்தில் இந்த சுவிசேஷத்தை ஆசியாவுக்கு எடுத்துச் சென்று (அப். 13; 14), அந்தியோகியா, இக்கோனியாம், லீஸ்த்திரா மற்றும் தெர்பை போன்ற நகரங்களில் போதித்தார்.*

*பவுலும், சீலாவும், தீமோத்தேயுவும் கொரிந்துவில் சத்தியத் தைப் போதித்தார்கள் (அப். 18:1-11), தெசலோனிக்கேயில் இருந்தவர்கள் இவர்களுடைய வசனங்களை தேவனிடத் திலிருந்து வந்த சத்தியங்கள் என்று கருதியதால் அவைகளை சந்தோஷத்தோடும், சரியான நிலையிலும் ஏற்றுக் கொண்டார் கள் (1 தெச. 2:13). பெரும்பாலும் பவுல் எபேசுவில் ஊழியம் செய்திருந்த மூன்றாண்டு கால கட்டத்திலேயே ஆசியாவில் இருந்த மற்ற ஆறு நகரங்களிலும் இருந்தவர்கள் சுவிசேஷத் தைக் கேட்டார்கள் (அப். 19:10; 20:31).*

*இந்த இடங்கள் எல்லாவற்றிலும், இராஜ்யத்தின் விதையை விதைத்த செயல்தான் இராஜ்யத்தில் குடிமக்களை உண்டாக்கி யது (லூக். 8:11), இராஜ்யத்தின் விதையானது விதைக்கப்பட்டு, முளைத்து, மலர்ந்து, அறுவடைக்கு முதிரும் நிலை அடையக் கூடிய நல்ல மற்றும் நேர்மையான இருதயங்களை சுவிசேஷப் பிரசங்கியார்கள் கண்டார்கள்.*

## நித்தியமான சில விஷயங்கள்

"சபை" என்று குறிப்பிடப்பட்ட மக்களே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் கொண்டிருந்த நித்திய திட்டத்தின் விளைவாய் இருந்தார்கள் (எபே. 1:3-6; 3:10). இயேசு தம் சபையைக் கட்டுவதாய்க் கொடுத்த வாக்குத்தத்தம் (மத். 16:18) மற்றும் அவர்களின் பாவத்தில் இருந்து அவர்களைக் கிரயம் கொள்வதற்காக அவர் பெற்ற மரணம் (அப். 20:28; 1 பேது. 1:18, 19) ஆகியவற்றில் இருந்து அவர்கள் விளைவானார்கள். இம்மக்கள் தேவனுடைய ஆவிக்குரிய சரீரமாகிய சபையின் தலையாகிய இயேசுவுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தச் சித்தமாய் இருந்தார்கள் (எபே. 1:22, 23). இவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவர்களாய் இருந்தார்கள் (எபே. 5:23).

இன்றைய நாட்களில் சபை என்பது தேவனுடைய நித்திய சித்தமானது நிறைவேற்றமடையச் செயல்படும் மக்கள் கூட்டத்தைக் கொண்டதாகவே இருக்கின்றது (எபே. 1:23). இவர்கள் மாத்திரமே தேவனுக்கு நிறைவான மற்றும் ஏற்புடைய மகிமை செலுத்துபவர்களாகக் குறிப்பிடப் படுகின்றார்கள் (எபே. 3:21). தேவனுக்கு ஏற்புடைய ஆராதனை செலுத்தக்கூடிய பரிசுத்த ஆசாரியர்கள் இவர்கள் மட்டுமே ஆவார்கள். இவர்கள் தேவனுடைய முழு கிருபையையும் பெற்றுள்ள தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், தேவனுக்கு விசேஷமாய்ச் சொந்தமான ஜனமாயும் இருக்கின்றார்கள் (1 பேது. 2:5, 9, 10).

ஆகையால் கர்த்தருடைய சபையின் உறுப்பினர்கள் - தங்களின் சொந்த நற்பண்புகள் எவற்றினாலும் அல்ல, ஆனால் அரசரின் சித்தத்திற்குக் கீழ்ப்படியும் தங்கள் சித்தத்தினாலும், உண்மையுடன் வாழ்ந்து மரணபரியந்தம் அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பதென்ற அவர்களின் சித்தத்தினால் - உண்மையிலேயே விசேஷித்தவர்களாய் இருக்கின்றார்கள். இயேசுவின் இரத்தத்தினால் அவர்கள் தங்களின் பாவங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்டுள்ளார்கள் (எபே. 5:26), மற்றும் அவர்கள் அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். தேவனுடைய வீட்டார் அல்லது குடும்பம் என்ற வகையில்

அந்நாளில் அவர்கள் அவரால் உரிமைகோரப்பட்டு, அவரது ஆவிக்குரிய வாரிசுகளுக்குரியதொரு மகிமையைப் பெறுவார்கள் (1 தீமோ. 3:15; 1 யோவா. 3:1).

## முடிவுரை

நடபடிகளில் விசேஷமான சில விஷயங்கள் தொடங்கின. யுகங்கள் மலருதலின் உச்சகட்டமாக அது இருந்தது (1 கொரி. 10:11). கிறிஸ்துவின் சிலுவைக்குப் பிறகு வாழும் மக்கள் இதுவரை வாழ்ந்த மக்கள் எல்லாரிலும் மாபெரும் ஆசீர்வாதம் பெற்ற மக்கள் ஆவார்கள். இன்றைய நாட்களில் வேதாகமத்தை வாசிப்பவர்கள் தேவன் தம் மக்களுடன் செயல்பட்ட வரலாற்றில் பின்னோக்கிப் பார்த்து, அவர் எவ்விதம் நீதியை நிலைநாட்டினார் என்பதைக் காண முடியும். இம்மாபெரும் வரலாற்றுச் செயல்பாடுகளைப் படிப்பதினால் கிறிஸ்தவர்களின் இருதயத்தில் நம்பிக்கை நிலைநாட்டப்பட முடியும் (ரோமர் 15:4). நித்திய காலமாகவே தேவன் பாவிகளுக்கு இரட்சிப்பை அளிக்கத் திட்டமிட்டு, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார். இந்த இரட்சிப்பை தேவன் எப்பொழுது, எங்கே மற்றும் எப்படி நிறைவேற்றினார் என்பதை வெளிப்படுத்துகின்ற மெய்சிலிர்க்கும் வரலாற்றுப் புத்தகமாக நடபடிகள் உள்ளது.

இரட்சிப்பின் திட்டமானது அதன் உச்சகட்டத்தை நெருங்குகையில், இயேசு தம் சபையைக் கட்டுவதாக வாக்குத் தத்தம் செய்தார். அவர் பலஸ்தீனம் முழுவதிலும் மூன்று ஆண்டுகள் சுற்றித் திரிந்து, இப்புதிய ஆவிக்குரியவையை போதித்து, உண்மையில் சபையை நிலைநாட்டுதல் மற்றும் முதல் நூற்றாண்டு முழுவதிலும் அதை வளரச் செய்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காகப் பன்னிரண்டு மனிதர் களுக்குப் பயிற்சியளித்தார். பரிசுத்த ஆவியினால் பலம்பெற்ற அப்போஸ்தலர்கள், இயேசு தங்களுக்குப் பயிற்றுவித்ததைச் செய்கையில் - இயேசு தமது சபையைக் கட்டினார். இயேசுவின் சபையினுடைய கட்டுமானத்திற்கெதிராக “பாதாளத்தின் வாசல்கள்” (மத். 16:18) அதை மேற்கொள்வதில்லை. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் கர்த்தருடைய சபையானது வெற்றி கொண்டது, இது நியாயத் தீர்ப்பு நாள் வரையிலும்

வெற்றி கொள்வதாகவே இருக்கும். நடபடிகள் என்பது மெய் சிலிர்க்கும் இவ்வெற்றியின் ஏவப்பட்ட பதிவேடாக உள்ளது.

---

குறிப்புகள்

*[1]அப். 2:47 (*KJV *மற்றும் தமிழில்) உள்ள "சபை" என்ற வார்த்தையானது, உபதேசப் பிழை எதையும் அறிமுகப்படுத்துவதில்லை. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளன்று சுவிசேஷ அழைப்புக்குப் பதில்செயல் செய்த இதே யூதக் குழுவானது பின்னாளில் "சபை" என்று அழைக்கப்பட்டது தெளிவு (அப். 5:11; 8:1, 3). [2]கிரேக்க மொழியில் பயன்பட்ட இன்னொரு பொதுவார்த்தையான baptismos என்பதை இயேசு இதே விதமான பயன்பாட்டிற்கு உட்படுத்தினார். இவ்வார்த்தையானது "மூழ்கடித்தல், அமிழ்த்துதல் அல்லது முழுக்காட்டுதல்" என்ற அர்த்தமுடைய baptizein என்பதில் இருந்து வருகின்றது. கம்பளி மற்றும் சாயத் தொழிலில் துணிப்பத்தைகளுக்கு மாறுபட்ட வண்ணம் கொடுப்பதற்காக அவைகளை சாயப் பானைகளுக்குள் அமிழ்த்துவதை அல்லது மூழ்கடிப்பதைக் குறிக்கவே இவ்வார்த்தையானது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. 1611ல்* KJV*யை மொழிபெயர்த்தவர் அவ்வார்த்தையை* "immersed" *(முழுக்காட்டுதல்) என்றே படித்திருக்க வேண்டும். இதற்குப் பதிலாக, இங்கிலாந்து சபையில் நீண்ட நாட்களாக ஏற்கனவே நடைமுறையில் இருந்த தெளித்தல் என்ற வழக்கத்திற்கு வசதியாய் இருக்கும்படியாக மொழிபெயர்ப்பாளர்கள்* "baptism" *என்ற புது வார்த்தையைக் கண்டு பிடித்தார்கள். இது ஒலிபெயர்ப்பு தானே தவிர மொழிபெயர்ப்பு அல்ல. [3]இம்மூன்று வகையான பயன்பாடுகளில் இருந்து விலக்கமாக ஒரே ஒரு தரம் மட்டும் ekklesia என்ற வார்த்தை வேறொரு வகையில் தெளிவாய்ப் பயன்படுத்தப் பட்டுள்ளது: ஸ்தேவான் "வனாந்தரத்திலே சபைக்குள்" (அப். 7:38) என்று குறிப்பிடும் பொழுது இவ்வாறான பயன்பாட்டைப் பெற்றது. இந்த சந்தர்ப்பப் பொருளில், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் நாட்டிற்குள் தேவன் வழி நடத்த வேண்டிய நோக்கத்திற்காக சீனாய் மலையின் வனாந்தரத்தில் கூடிய யூதர்களை ஸ்தேவான் குறிப்பிட்டார்.*